**சார்பு நீதிமன்றம், போளூர்**

**முன்னிலை– திரு. S.செந்தில்பாபு, எம்.ஏ.எம்.எல்.,**

**சார்பு நீதிபதி, போளூர்,**

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13–ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**O.S.No:157/2025**

**CNR No.TNTM22-000741-2025**

ஞானவேல் ... வாதி

//எதிர்//

குமார் ...பிரதிவாதி

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தின் முன்பாக விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.லோகநாதன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதியை ஒரு தலைபட்ச உத்தரவுக்கு உட்படுத்தியும் வாதி தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**தீர்ப்புரை**

வழக்குத்தொகை ரூ.2,72,000/–ம் அசல் தொகைக்கு வழக்கு தாக்கலான நாள் முதல் தொகை முழுவதும் வசூலாகும் நாள் வரை ஆண்டுக்கு 9% பின்வட்டியும், செலவுத் தொகை கோரியும் வாதியால் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்**

வாதியிடம் பிரதிவாதி சரியான பிரதிபலன் முன்னிலைக்கு ரூ.2,00,000/–ஐ பெற்றுக்கொண்டு, அதற்கு மாதம் 1–க்கு ரூ.100/–க்கு ரூ.2 சதவீதம் வட்டியுடன் அசலையும் வேண்டும்போது தருவதாக ஒப்புக்கொண்டு வாதி பெயருக்கு 15.06.2022 அன்று கடனுறுதி சீட்டை எழுதி கையொப்பம் செய்து கொடுத்தார். மேற்படி கடனுறுதிச் சீட்டின் அசல், வட்டி தொகையை செலுத்துமாறு மேற்படி வாதி, பிரதிவாதியை பலமுறை நேரில் கேட்டும் கடனை பைசல் செய்யாமல் காலம் கடத்தி வந்ததால் வாதி வழக்கறிஞர் மூலம்

அறிவிப்பு அனுப்பியதை பிரதிவாதி பெற்றுக்கொண்ட பின்னரும் கடனை பைசல் செய்ய முன் வராததால் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறார்.

3. பிரதிவாதி 18.07.2025 அன்று இந்நீதிமன்றத்தில் அழைத்தும் அஜரின்மையால் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டுள்ளார்.

4. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் வழக்கு அனுமதிக்கத்தக்கதா ?

5. வாதி தரப்பில் வாதி திரு.ஞானவேல் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ–1 முதல் வா.சா.ஆ–3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், வாதி தரப்பில் திரு.கணேசன் என்பவர் வா.சா.2 ஆக சாட்சியம் அளித்துள்ளார். பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>தீர்வு:–</u>

6. வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதி தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை அனுசரித்து வாதியின் வழக்கை அனுமதிக்கும்படி வாதுரை செய்தார்.

7. வாதித் தரப்பு வழக்கை நிரூபிக்கும் முகமாக வாதி திரு.ஞானவேல் வா.சா.1 ஆக சாட்சியம் அளிக்கும்போது, பிரதிவாதி ரூ.2,00,000/–ஐ பெற்றுக்கொண்டு, அந்த தொகைக்கு ஆண்டுக்கு 24 சதவீதம் வட்டி கொடுப்பதாக ஒப்புக்கொண்டு, வாதி பெயருக்கு 15.06.2022 அன்று கடனுறுதி சீட்டை எழுதி கையொப்பம் செய்து கொடுத்ததாக தெரிவித்துள்ளார். மேற்கண்ட கூற்றை நிரூபிப்பதற்கு கடனுறுதிச் சீட்டின் அசலை வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ளார். வா.சா.ஆ.1யை பரிசீலிக்கையில் மேற்கண்ட வாதியின் கூற்று உண்மை என தெரியவருகிறது. மேலும், வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் மற்றும் வா.சா.ஆ.3 பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் கணினி பதிவிறக்க நகல் ஆகியவற்றை

பரிசீலிக்கையில் மேற்படி கடனுறுதிச் சீட்டின் அசல், வட்டி தொகையை செலுத்துமாறு வாதி, பிரதிவாதியை பலமுறை நேரில் கேட்டும் அவர் கடனை பைசல் செய்ய முன் வரவில்லை என்ற கற்றறிந்த வாதி வழக்கறிஞர் வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக உள்ளது.

8. மேற்படி வா.சா.1ன் சாட்சியமும், அதனை உறுதிப்படுத்தும் விதமாக வா.சா.ஆ1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்களை பரிசீலனை செய்கையில் வாதியிடம், பிரதிவாதி 15.06.2022 அன்று ரூ.2,00,000/- கடன் பெற்றுக்கொண்டு அந்தத் தொகைக்கு ஆண்டுக்கு 24 சதவீதம் வட்டி கொடுப்பதாக ஒப்புக்கொண்டார் என்ற சங்கதி இந்நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி சாட்சிய சான்றாவணங்களை மறுத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்யவோ, சாட்சியமளிக்கவோ பிரதிவாதி முன்வரவில்லை என்பதாலும், வாதி தரப்பு வழக்கு சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதால், வாதித் தரப்பு வழக்கை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

இறுதியாக, வாதியின் வழக்கு அனுமதிக்கப்பட்டு, வாதிக்கு பிரதிவாதி வழக்கு தொகை ரூ.2,72,000/-ம் அசல் தொகை ரூ.2,00,000/-க்கு வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதி வரை ஆண்டுக்கு 9 சதவீத வட்டியும் பின்னிட்டு தொகை முழுவதும் வசூலாகும் வரை ஆண்டுக்கு 6 சதவீத வட்டியும் வழக்கு செலவுத்தொகையும் கொடுக்க வேண்டும் என்று தீர்ப்புரை பகரப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டசருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைத்திருத்தம் செய்த பின்னர் 2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 13-ம் நாளான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

S SENTHILBABU

Digitally signed by S SENTHILBABU
Date: 2026.03.13 16:12:57 +0530

சார்பு நீதிபதி
போளூர்.

**<u>வாதி தரப்பு சாட்சிகள்</u>**

வா.சா.1 – திரு.ஞானவேல்

வா.சா.2 – திரு.கணேசன்

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 – 15.06.2022 | – | கடனுறுதி சீட்டு அசல் |
| வா.சா.ஆ.2 – 03.06.2025 | – | வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3 – -- | – | அஞ்சல் ஒப்புதல் அட்டை |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** – இல்லை

S SENTHILBABU Digitally signed by S SENTHILBABU Date: 2026.03.13 16:13:01 +0530

**சார்பு நீதிபதி,**
**போளூர்.**